# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:34** **தேதி:-07.04.2015**

### BSNL ஏன் போட்டியில் தோற்றது?

அன்பார்ந்த தோழர்களே,

**"BSNL மற்றும் MTNL ஆகிய இரு நிறுவனங்களும் 2005-06ஆம் ஆண்டு வரை ஆயிரம் ஆயிரம் கோடி ரூபாய்களை லாபமீட்டி வந்தன. இவ்வளவு நெருக்கடியான நிலைக்கு தற்போது அந்த நிறுவனங்கள் அடைந்ததற்கு, அதற்கு பிந்தைய ஆண்டுகளில் என்னதான் நடந்தது? அந்த நிறுவனங்கள் தங்களை விரிவுபடுத்திக் கொள்ள அனுமதிக்கப்படாமல் இருக்க ஒவ்வொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன என்பதைத் தான் நான் சொல்ல முடியும்.**

**நீங்கள் இந்த துறையை தொடர்ந்து ஊர்ந்து கவனித்து வருகிறீர்கள். இந்த இரண்டு பொதுத்துறை நிறுவனங்களும் கடந்த ஏழு ஆண்டுகளாக மோசமாக நடத்தப்பட்டது என்பதை நாம் நம்பித்தான் ஆகவேண்டும்" (28.02.2015 அன்று CNBC-TV18 க்கு மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் அவர்களின் பேட்டியில்).**

**"என்ன தவறு நடந்தது என்பதை நாம் முதலில் கண்டு பிடித்து தற்போது என்ன செய்ய வேண்டும் என முடிவு செய்ய வேண்டும். இந்த துறை பெரிய அளவில் வளர்ச்சி கண்ட 2006ஆம் ஆண்டுகளில் நாம் மொபைல்/குரல் அழைப்புகள் பேருந்தை தவற விட்டு விட்டோம். மொபைல் துறையில் நமது நுழைவு என்பது வெறும் 40-45% மட்டுமே. 2005ஆம் ஆண்டு வரை BSNL நிறுவனம் தான் மிக உயர்ந்த தொலை தொடர்பு நிறுவனம். புதிய சந்தாதாரர்களை சேர்ப்பதற்கு தேவையான கருவிகளை வாங்க இயலாத வண்ணம் நமது டெண்டர்களில் நாம் வெற்றி பெறாததால் நாம் போட்டியில் தோற்றோம்"- (05.02.2015 தேதியிட்ட BUISNESS STANDARD பத்திரிக்கைக்கு திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அளித்த பேட்டியில்).**

தற்போது BSNL நிறுவனம் சகல பக்கங்களிலும் அடி வாங்கும் மாணவனை போலாகி விட்டது. இதன் சேவைகளின் குறைந்த தரம் தொடர்பாக பொது மக்கள் மத்தியில் கடும் விமர்சனம் எழுந்து வருகிறது. தொடர்ந்து ஆறு ஆண்டுகளாக நஷ்டத்தை சந்தித்து வருகிறது. BSNLக்கு எதிராக கார்ப்பரேட் மீடியாக்கள் ஒரு சக்தியான பிரச்சாரத்தை நடத்தி வருகிறது. அது பொதுத்துறை நிறுவனமாக நீடிக்கும் வரை அதனால் மக்களுக்கு சிறந்த சேவையை தர இயலாது என பிரச்சாரம் செய்யப்படுகிறது. உடனடியாக அதனை தனியார்மயமாக்க வேண்டும் என்பதே அதன் பொருள். சொத்து மதிப்புகளின் அடிப்படையில் நாட்டின் பத்தாவது மிகப்பெரிய நிறுவனம் BSNL. VSNL மற்றும் BALCO நிறுவனங்களில் செய்ததை போல BSNLன் சொத்துக்களை கார்ப்பரேட் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்காக அதனை தனியார் மயமாக்க வேண்டும் என்கிற திட்டமிட்ட சதி நடைபெற்று வருகிறது.

ஒரு புறம் புதிய தாராளமய கொள்கைகள் மறுபுறம் தனியார் தொலைதொடர்பு நிறுவனங்கள் மற்றும் அதிகாரத்தில் உள்ள அரசியல் வாதிகள் ஆகியோரின் சதி காரணமாக BSNL நிறுவனம் பலிகடா ஆக்கப்பட்டுள்ளது என்று BSNL ஊழியர் சங்கம் தொடர்ந்து கூறி வருகிறது. 2008-09ஆம் ஆண்டு வரை BSNL நிறுவனம் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை லாபமீட்டி வந்துள்ளது. 2004-05ஆம் ஆண்டு அது நிகர லாபமாக 10,183 கோடி ரூபாய்களை ஈட்டியுள்ளது.

BSNLக்கு தேவையான கருவிகள் வாங்குவதில் திட்டமிட்ட தடைகள் உருவாக்கப்பட்டன. அதன் காரணமாக BSNLன் வளர்ச்சிக்கு மிகப்பெரிய அடி விழுந்தது. மொபைல் கருவிகள் வாங்குவதற்கான அதன் மெகா டெண்டர்கள் 2007 மற்றும் 2010ஆம் ஆண்டுகளில் ரத்து செய்யப்பட்டன. கிட்டத்தட்ட ஏழு ஆண்டு காலம் அதன் விரிவாக்கத்திற்கு தேவையான கருவிகள் வாங்குவது அனுமதிக்கப்படாமல் தடை செய்யப்பட்டது. இது தான் BSNL சேவையின் தரம் குறைவதற்கு முக்கிய காரணம். தனியார் நிறுவனங்களுக்கு பலன் கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் காரணமாகவே BSNLன் டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டன.

நமது குற்றச்சாற்றுகள் உண்மை என்பதையே மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு ரவிசங்கர் பிரசாத் மற்றும் CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தா ஆகியோரின் அறிக்கைகள் உறுதி செய்கின்றன. உண்மையில் சொல்லப்போனால், திரு ரவிசங்கர் பிரசாத் மத்திய தொலை தொடர்பு அமைச்சராக பதவி ஏற்ற நாள் முதலே BSNL வளர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை என கூறி வருகிறார். ஆனால் எந்த விதமான நடவடிக்கையையும் எடுக்காமலேயே இவர் கடந்த பத்து மாதங்களாக இதனை கூறி வருகிறார். சதிகளின் பலிகடாவாக மாறிவிட்ட BSNLஐ புத்தாக்கம் செய்வதற்கு அவர் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

BSNLன் விரிவாக்கம் வெகுவாக காலதாமதப்படுத்தப்பட்டு விட்டதால், நவீன தொழில் நுட்பங்களை மையப்படுத்திய மொபைல் கருவிகள் உடனடியாக வாங்குவது அவசர தேவை. இதற்கான பெரிய அளவிலான நிதி தேவைப்படுகிறது. இதற்கு தேவையான நிதியாதாரம் கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். வெற்று அறிக்கைகள் பிரச்சனைக்கு தீர்வாகாது. மத்திய தொலை தொடர்பு அமைச்சர் விரைவாக நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**